1986 மே 5] [திரு. கி. ராமன்]

17—4—1986 அன்று திரு. சீனியா பிள்ளை அவதூறாகப் பேசியது என்னை நேரடியாகப் பாதிப்பதாகும், இதர இனத்தவர்களால் ஆதிதிராவிட மக்களுக்கு கொடுமைகள் இழைக்கப்பட்டால் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க காவல்துறையில் ஒரு தனிப் பிரிவே இருக்கிறது. ஆனால், காவல் துறையினரே அந்தக் கொடுமையைச் செய்தால் எங்கே போவது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கவனத்தை ஈர்த்து விட்டீர்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரட்டும். காவல் துறை மானியத்தில் அவர் பதில் சொல்வார்.

திரு. கி. ராமன்: ஆகவே இதுபோன்ற சம்பவங்கள் மேலும் தொடராமல் இருக்க, உடனடியாக விசாரணை நடத்தி பாதிக்கப் பட்ட ஆதிதிராவிடரையும் விசாரித்து, ஒடுக்கப்பட்ட மக்களின் குடியுரிமையை நிலைநாட்டும் வகையில், தவறுசெய்த அதிகாரிகள் பெயரில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

கலசப்பாக்கம் தொகுதி ஆதமங்கலம் மின்துணை நிலையம் குறித்து

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள ஆதமங்கலம் மின்துணை நிலையத்தின்மீது இடி விழுந்ததன் விளைவாக அப்பகுதியிலுள்ள வீராளூரிலிருந்து சுமார் 10 ஊர்களில் தினம் அரை மணி நேரம் கூட மின்சாரம் வாராமையால் விவசாயப் பம்பு செட்டுக்களை இயக்க முடியாமல் சுமார் 2,000 ஏக்கர் நிலங்களில் பயிர் செய்யப்பட்டுள்ள நெற்பயிர் சாவியாகும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன். அதுபற்றி பரிசீலித்து, கவனம் செலுத்துமாறு மின்துறைக்கு அறிவுரை வழங்கப்படும்.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 மே 5

அறிக்கை.

கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள ஆதமங்கலம் மின் துணை நிலையத்தின்மீது இடி விழவில்லை. ஆயினும், 1985 ஆம் வருடம் ஜூன் திங்கள் 31-ம் நாள் இயக்கிவைக்கப்பட்ட இரு 1.6 எம்.வி.ஏ. மின் மாற்றிகளில் ஒன்று, செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் பழுதடைந்து விட்டது. அதற்குப் பதிலாக உடனே நிறுவ, மாற்று மின் மாற்றி இல்லாததால் சில மின் பளுக்கள் காஞ்சி துணை மின் நிலையத்திற்கு தற்காலிகமாக மாற்றப் பட்டன. இரண்டு 3.15 எம்.வி.ஏ. மின் மாற்றிகள் முன்பே பிறப்பிக்கப்பட்ட கொள்முதல் ஆணையின்படி மே திங்களில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றன. அவை கூடிய விரைவில் நிறுவப்பட்டு இயக்கி வைக்கப்படும். அதன் பிறகு, வீராளூர் மற்றும் இதர பத்து கிராமங்கள் காஞ்சி துணை மின் நிலையத்திலிருந்து ஆதமங்கலம் துணை மின் நிலையத்திற்கு மாற்றப்படும்.

வீராளூர் மற்றும் இதர பத்து கிராமங்களுக்கு நாள்தோறும் ½ மணி நேரம் கூட மின்சாரம் வழங்கப்படவில்லை என்ற முறையீடு சரியானதாகத் தோன்றவில்லை. இந்த ஊர்களுக்கு அமுலில் உள்ள முறையான நேரங்களில் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கல்பாக்கம் உற்பத்தி நிலையம் மற்றும் தூத்துக்குடியில் ஒரு இயந்திரம் இயங்காததால், மின் கட்டமைப்பில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணத்தினால் 31—3—1986 முதல் 18—4—1986 வரை, குறைவான நேரங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டது.

இப்பொழுது மின்சார கட்டமைப்பு சீராக ஆகிவிட்டபடியால், அமுலில் உள்ள முறையான நேரங்களில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதும் கலசப்பாக்கம் தொகுதியில் சுமார் 10 ஊர்களில் மின்சாரம் அடிக்கடி குறைவாக வருகின்ற காரணத்தால், அந்த மோட்டாரினுடைய காயில்கள் தீய்ந்து விவசாயிகள் மிகவும் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். அதை நீக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1986 மே 5]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுபற்றி மின் வாரியத்தினர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் வழங்கும் விசைச் செக்குகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ள சுமார் 20,000 விசைச் செக்குகளிலுள்ள தயாரிப்பு குறைபாடுகளின் காரணமாக அவை இயங்காமலுள்ள தால் கடன் பெற்றவர்கள் படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக இது வரை 3,596 மின்விசைச் செக்குகள் மட்டுமே தனி நபர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. கவன ஈர்ப்பு தீர்மானத்தில் கூறியுள்ளதுபோல், 20,000 விசைச் செக்குகள் வழங்கப்படவில்லை.

ரோட்டரி போன்ற செக்குகளுக்கு அதிக மூலதனம் தேவைப் படுவதினாலும் சிக்கன முறையில் சுலபமாக இயக்கக்கூடிய ஓவர் ஹெட் விசைச் செக்கினை கதர் கிராமத் தொழில் ஆணையம் கண்டுபிடித்தது. இவைகள் 1972-73 முதல் 1980-81 வரை விநியோகம் செய்யப்பட்டன. 1981-82-ல் மேற்படி விசைச் செக்கின் அமைப்பில் மாறுதல் செய்யப்பட்டது. இவ்வாறு